பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
*30 01 2026 FRIDAY 6 30 PM*
<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

*1)* ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்திற்கு மேலும் வலு சேர்க்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

*2)* தமிழகத்தில் காவல்துறை இருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்படும் அளவிற்கு குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

*3)* மாதவிடாய் ஆரோக்கியம், அடிப்படை உரிமையின் ஒரு பகுதியாகும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

*4)* கூட்டணி தொடர்பாக காங்கிரசுடன் எவ்வித மோதலும் இல்லை என்று திமுக கூறியுள்ளது.

*5)* அஹமதாபாத் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Tanvi Khanna* இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்திற்கு மேலும் வலுசேர்க்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் அளித்து, மத்திய அரசு பிற நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், தொழில்துறை வளர்ச்சியடையும் என்றும், கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் காவல்துறை இருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில், இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே, விவசாயி மீது பெட்ரோல் ஊற்றி தீ வைக்கப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்கு சீர்குலைந்துள்ளது என்பதை இந்த சம்பவம் எடுத்துரைப்பதாக அவர் கூறியுள்ளார்.

பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு சீர்குலைவை தடுக்க, உரிய நடவடிக்கைகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

இதற்கிடையே, நாட்டிலேயே தமிழகத்தில் தான் குற்றச் செயல்கள் குறைவாக உள்ளதாக மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருப்பினும் குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறும் குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் எடுபடாது என்று தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தூய்மைப் பணியாளர்களை திமுக அரசு தொடர்ந்து இழிவுபடுத்தி வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருநெல்வேலி மாவட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவு மோசமான தரத்தில் இருப்பதாகவும், இதுதொடர்பாக தூய்மைப் பணியாளர்கள் வெளியிட்ட காணொலி வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தூய்மைப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு திமுக அரசு காட்டும் நன்றிக்கடன் இதுதானா என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

>>>>>><<<<<<

கூட்டணி தொடர்பாக காங்கிரஸ் கட்சியுடன் எவ்வித மோதலும் இல்லை என்று திமுக துணைப் பொதுச்செயலாளர் திருமதி. கனிமொழி கூறியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல்காந்தியுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக தெரிவித்தார்.

திமுக தலைமையிலான கூட்டணியில், புதிய கட்சிகள் இடம்பெறுவற்கு வாய்ப்புகள் உள்ளதாகவும் திருமதி. கனிமொழி கூறினார்.

>>>>>><<<<<<

அஇஅதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் வரும் புதன்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

சட்டப்பேரவை தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் குறித்து இதில் விவாதிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

கர்நாடகாவிலிருந்து பால் கொள்முதல் செய்யும் முடிவை திமுக அரசு கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் குறைவான விலையில் பால் கிடைக்கும் போது, அதனை முழுமையாக கொள்முதல் செய்யாமல், கர்நாடகாவிலிருந்து அதிக விலை கொடுத்து அதை கொள்முதல் செய்ய, ஆவின் நிறுவனம் முடிவு செய்திருப்பதாக வெளியான தகவலை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆவின் நிறுவனத்தின் இந்த நடவடிக்கை ஏற்புடையதல்ல என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்மையில் நடைபெற்ற குற்றச் சம்பவங்களை பட்டியலிட்டார்.

தேர்தல் கூட்டணி குறித்து உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும் என்றும் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மாதவிடாய் ஆரோக்கியம், அடிப்படை உரிமையின் ஒரு பகுதியாகும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. *Pardiwala*, திரு. *Mahadevan* அமர்வு, இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

நாடுமுழுவதும் உள்ள பள்ளிகளில் மாணவிகளுக்கு இலவசமாக சானிடரி நாப்கின் வழங்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பள்ளிகளுக்கும் இது பொருந்தும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து பள்ளிகளிலும் கழிவறைகள் சுகாதாரமாக பராமரிக்கப்பட வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை நிறைவேற்றப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுத் துறையில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. பிச்சாண்டி கூறியுள்ளார்.

திருவண்ணாமலையில், மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் வீரர்களுக்கு தமிழக அரசு ஊக்கமளித்து வருவதாகவும் திரு. பிச்சாண்டி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் இதுவரை 500 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. முத்துசாமி கூறியுள்ளார்.

இன்று ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை திமுக அரசு நிறைவேற்றியிருப்பதாக கூறினார்.

10 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பிரச்சினைகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவற்றை சரிசெய்து, அந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் என்று அவர் கூறினார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில், திமுக தலைமையிலான கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு. முத்துசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தொழில்துறையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் பட்டு விவசாயிகளுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசினார்.

பட்டு உற்பத்தியை அதிகரிக்க மானிய நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இதனை பட்டு விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. ராஜேந்திரன் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

<u>மாவட்டச் செய்திகள்</u>

கள்ளக்குறிச்சி மாவட்டம், அனுமனந்தல் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு 3 லட்சம் ரூபாய், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில், 138 பேருக்கு பணிநியமன ஆணைகளை ஆட்சியர் திரு. தினேஷ் குமார் இன்று வழங்கினார்.

>>>>>><<<<<<

தென்காசியில் இன்று நடைபெற்ற போதைப்பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆட்சியர் திரு. கமல் கிஷோர், போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் மாணவர்கள் பங்கேற்ற வாக்காளர் தின விழிப்புணர்வுப் பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

மத்திய மக்கள் தொடர்பு அலுவலகத்தின் கோவை அலுவலகம் சார்பில் தூய்மை இந்தியா இருவார விழா, ஒரே பாரதம் உன்னத பாரதம் மற்றும் வாக்காளர் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில், போதைப்பொருள் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று பொதுமக்களிடம் வழங்கினார்.

>>>>>><<<<<<

சேலம் மாவட்டம், ஓமலூரில் சீட் பெல்ட் அணிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு கார் பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டத்தில் சட்டப் பணிகள் ஆணைய குழுவின் புகைப்பட கண்காட்சியை, அதன் தலைவர் நீதிபதி திரு. குணசேகரன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், கடம்பன்மூடு விநாயகர் கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு, வரும் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் இல்லங்களுக்கே சென்று பொதுவிநியோக திட்ட பொருட்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Tanvi Khanna* இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 11-9, 11-4, 11-7 என்ற செட்கணக்கில், ஹாங்காங்கின் *Bobo Lam*-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Devika Sihag* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-19, 21-18 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் *Supanida Katethong*-யை வென்றார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியின், 14 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில், இந்தியாவின் *Jensi Kanabar* பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 3-6, 6-4, 6-1 என்ற செட்கணக்கில், ஆஸ்திரேலியாவின் *Musemma Cilek*-வை வென்றார்.

>>>>>><<<<<<

தோஹாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் *Sayali Wani* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-6, 10-12, 11-8, 11-9 என்ற செட்கணக்கில் சீனாவின் *Yao Ruixuan*-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

**அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Anahat Singh, Veer Chotrani* காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.**

***>>>>>><<<<<<<***

**புரோ ஹாக்கி லீக் போட்டிக்கான *33* பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.**

***>>>>>>END<<<<<<<***